# COVID-19 தடுப்பூசிப் பாதுகாப்பு: தெரிந்து கொள்ள வேண்டியவை

Vaccinate WA

CovidVaccineWA.org

## தடுப்பூசிகள் பாதுகாப்பானவை

யுனைடெட் ஸ்டேட்ஸில் எங்களிடம் உள்ள COVID-19 தடுப்பூசிகள் யு.எஸ் வரலாற்றில் மிகக் கடுமையான பாதுகாப்புச் சோதனைகளை கடந்து வந்துள்ளன. அனைத்து தடுப்பூசிகளும் U.S. Food and Drug Administration (FDA, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம்) மூலம் முழுமையான பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன அல்லது அவசரகால பயன்பாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன –அதாவது FDA எந்தவிதமான தீவிர பாதுகாப்பு கவலைகள் இல்லை எனக் கண்டறிந்துள்ளது.

பொதுமக்கள் தடுப்பூசிகளைப் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனானது தொடர்ந்து கண்காணிக்கப்படுகிது. அமெரிக்காவில் பாதுகாப்பு சிக்கல்களைக் கண்டறிந்து அவை நிகழும்போது விரைவாக நடவடிக்கை எடுக்க பல அமைப்புகள் உள்ளன.

## தடுப்பூசிகள் வேலை செய்கின்றன

சில தடுப்பூசிகள் மற்றவைகளை விடச் சிறந்தவை எனத் தோன்றும்படியான தகவல்களை நீங்கள் பார்த்திருக்கலாம். தற்போது கிடைக்கக்கூடிய அனைத்துத் தடுப்பூசிகளும் COVID-19 ஐத் தடுப்பதில் மிகவும் பயனுள்ளதாக இருந்தன என்பதை மருத்துவ பரிசோதனைகள் காட்டின. தடுப்பூசிகள் வெவ்வேறு நேரங்களிலும் இடங்களிலும் சோதிக்கப்படுவதால் அவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளை ஒப்பிடுவது கடினமாக உள்ளது. COVID-19 இன் வெவ்வேறு விகாரங்களுக்கு எதிராக கூட அவற்றில் சில சோதனைக்குட்பட்டன.

நீங்கள் முழுமையாக தடுப்பூசி போட்டாலும் கூட, COVID-19 ஆல் பாதிப்புறும் சாத்தியம் உள்ளது, ஆனால் நீங்கள் உண்மையில் நோய்வாய்ப்பட வாய்ப்பில்லை அல்லது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. **கடுமையான** COVID-19 நோயைத் தடுத்துப் போராடுவதில் ஒவ்வொரு தடுப்பூசியிலும் குறைந்தபட்சம் 85 சதவிகித செயல்திறன் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. **பலருக்கும்** COVID-19 அறிகுறிகள் வராமல் தடுப்பூசிகள் தடுத்தன:

- Johnson & Johnson (Janssen), 74 சதவீதம்
- Pfizer-BioNTech, 95 சதவீதம்
- Moderna, 94 சதவீதம்

## பக்க விளைவுகள் இயல்பானவை

நீங்கள் தடுப்பூசியின் மூலம் COVID-19 ஆல் பாதிக்கப்படமாட்டீர்கள். இருப்பினும், மற்ற தடுப்பூசிகளைப் போலவே, நீங்கள் சில பக்க விளைவுகளை உணரலாம். இவை தடுப்பூசி வேலை செய்வதற்கான அறிகுறிகள் ஆகும். இரு மருந்தளவு தடுப்பூசிகளின், இரண்டாவது மருந்தளவுக்குப் பின் வரும் பக்க விளைவுகள் மோசமாக இருக்கலாம் முடிந்தால், மருந்து செலுத்திய பின்பு ஓரிரு நாட்கள் ஓய்வெடுக்கவும் குணமடையவும் உங்களுக்கான நேரத்தைக் கொடுங்கள். இரண்டு மருந்தளவுகள் தேவைப்படும் COVID-19 தடுப்பூசிகளுக்கு, உங்கள் இரண்டாவது மருந்தளவைப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் இரண்டாவது மருந்தளவு எடுத்துக்கொண்டபின் இரண்டு வாரங்கள் வரை முழுமையாகப் பாதுகாக்கப்பட மாட்டீர்கள்.

**உங்கள் கையில் ஷாட் இடப்பட்ட இடத்தில்:**

- வலி
- சிவந்த நிறம்
- வீக்கம்



**உங்கள் உடல் முழுவதும்:**

- சோர்வு
- தலைவலி
- தசை வலி
- குளிர்
- காய்ச்சல்
- குமட்டல்



[1] Centers for Disease Control and Prevention, "Safety of COVID-19 Vaccines (COVID-19 தடுப்பூசிகளின் பாதுகாப்பு).". மார்ச் 25, 2021, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.cdc.gov/coronavirus/2019-ncov/vaccines/safety/safety-of-vaccines.html (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்).

# ஒவ்வாமை எதிர்வினையின் அறிகுறிகள்

தடுப்பூசிக்கு ஒவ்வாமை எதிர்வினைகள் மிகவும் அரிதானவையாக இருந்தாலும், அவை நிகழலாம். நீங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்ட பின் ஒவ்வாமை ஏற்பட்டால், குறைந்தது 15 நிமிடங்களாவது கிளினிக் கவனிக்கும். உங்களுக்குப் பதிலளிக்கவும், எவ்வாறு உதவுவது என்றும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிளினிக்கிலிருந்து வெளியேறிய பிறகு உங்களுக்கு ஒவ்வாமை இருந்தால், 911 ஐ அழைக்கவும். ஒவ்வாமை எதிர்வினையின் அறிகுறிகள் பின்வருமாறு: சுவாசிப்பதில் சிக்கல், உங்கள் முகம் மற்றும் தொண்டை வீங்கிப் போதல், வேகமான இதய துடிப்பு, உங்கள் உடல் முழுவதும் ஒரு மோசமான அரிப்பு, தலைச்சுற்றல் மற்றும் பலவீனம்.

## எந்தவொரு பாதுகாப்பு நெருக்கடிகளையும் கவனிக்க எங்களுக்கு உதவுங்கள்

எந்த பக்க விளைவுகளையும் பற்றி புகாரளிக்க V-safe ல் பதிவு செய்க: vsafe.cdc.gov (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்). உங்களது பங்கேற்பு அனைவருக்குமான தடுப்பூசிகளைப் பாதுகாப்பானதாக வைத்திருக்க உதவுகிறது.

நீங்கள் அல்லது உங்கள் தடுப்பூசி வழங்குநர் Vaccine Adverse Event Reporting System (VAERS, தடுப்பூசி பாதகமான நிகழ்வு அறிக்கையிடல் அமைப்பு ) க்கு கடுமையான பக்க விளைவுகளைப் புகாரளிக்கலாம். FDA, Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) மற்றும் Washington State Department of Health (DOH, வாஷிங்டன் மாநில சுகாதாரத் துறை) ஆகியவை போக்குகள் அல்லது சாத்தியமான சிக்கல்களைக் காண VAERS ஐப் பயன்படுத்துகின்றன.

நீங்கள் ஒரு அறிக்கையை vaers.hhs.gov (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்) இல் சமர்ப்பிக்கலாம்

## பல இனங்கள் மற்றும் இன மக்கள் சோதனைகளில் பங்கேற்றனர்

ஒவ்வொரு தடுப்பூசியையும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மீது விஞ்ஞானிகள் பரிசோதித்தனர்.

- வெள்ளையர்e
- ஹிஸ்பானிக் அல்லது லத்தீன்
- கருப்பர் அல்லது ஆப்பிரிக்க அமெரிக்கர்
- ஆசியர்
- அமெரிக்கன் இந்தியன் அல்லது அலாஸ்காவின் பூர்வகுடி
- ஹவாயின் பூர்வகுடி அல்லது பிற பசிபிக் தீவுவாசி
- பல் இனம்
- அறிக்கையளிக்கப்படவில்லை
- மற்றவை










[2]Food and Drug Administration. "FDA Briefing Document: Pfizer-BioNTech COVID-19 Vaccine", Vaccines and Related Biological Products Advisory Committee (தடுப்பூசிகள் மற்றும் அது தொடர்பான உயிரியல் தயாரிப்புகள் ஆலோசனைக் குழு)கூட்டம். டிசம்பர் 10, 2020, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/144245/download (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்).
[3]Food and Drug Administration. "FDA Briefing Document: Janssen Ad26.COV2.S Vaccine for the Prevention of COVID-19", Vaccines and Related Biological Products Advisory Committee கூட்டம். பிப்ரவரி 26, 2021, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/146217/download (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்).
[4]Food and Drug Administration. "FDA Briefing Document: Moderna COVID-19 Vaccine", Vaccines and Related Biological Products Advisory Committee கூட்டம். டிசம்பர் 17, 2020, ஆன்லைனில் கிடைக்கிறது: https://www.fda.gov/media/144434/download (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்).



தடுப்பூசி குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் நீண்டகாலம் உடல்நலப் பிரச்சனை உள்ளவர்களுக்கு பாதுகாப்பானதாகவும் பயனுள்ளதாகவும் உள்ளது. அதிகமான மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்வதால், நாங்கள் பாதுகாப்பு மற்றும் பக்க விளைவுகள் குறித்த கூடுதல் தரவைப் பெறுகிறோம். கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்றும் தீவிரமான பக்க விளைவுகள் ஏற்படுவது அரிதானவை என்றும் தரவுகள் காட்டுகின்றன.

# தடுப்பூசி போடுவது குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் சுகாதார வழங்குநர் அல்லது கிளினிக் பணியாளருடன் பேசுங்கள்



### ஒவ்வாமைகள்

- தடுப்பூசியில் உள்ள எந்தவொரு மூலப்பொருளாலும் ஒவ்வாமை ஏற்படாத எவருக்கும் தடுப்பூசியை Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) பரிந்துரைக்கிறது.
- COVID-19 தடுப்பூசிகளின் மூலமான ஒவ்வாமை பெரும்பாலும் தடுப்பூசியில் உள்ள கொழுப்புகளால் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது, இது பாலிஎதிலீன் கிளைகோல் (PEG) மற்றும் பாலிசார்பேட் என அழைக்கப்படுகிறது.
- இந்தத் தடுப்பூசிகளில் மற்ற உணவுகளில் காணப்படுவது போன்ற பொதுவான ஒவ்வாமை மருந்துகள் இல்லை, எனவே COVID-19 தடுப்பூசி எடுத்துக்கொள்ளும்போது மற்ற ஒவ்வாமைகளைப் பற்றிக் கவலைப்படக்கூடாது எடுத்துக்காட்டாக, தடுப்பூசிகள் முட்டை இல்லாதவை, மரப்பால் இல்லாதவை, மற்றும் பாதுகாப்புக் காரணிகள் அற்றவை.

### நெறிமுறைகள்

COVID-19 தடுப்பூசியின் மூலப் பொருட்கள் பாதுகாப்பானவை மற்றும் தடுப்பூசிகள் அவற்றின் வேலையைச் செய்யத் தேவையானவை. Johnson & Johnson தடுப்பூசியின் ஒரு பகுதியானது 35 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்புகளிலிருந்து வந்த உயிரணுக்களின் ஆய்வகத்தால் வளர்க்கப்பட்ட பிரதிகளுக்குள் தயாரிக்கப்படுகிறது. சிக்கன் பாக்ஸ், ரூபெல்லா, ஹெபடைடிஸ் ஏ உள்ளிட்ட பல தடுப்பூசிகளும் இம்மாதிரியாகவே செய்யப்படுகின்றன. எந்தவொரு தடுப்பூசியும் மனித செல்கள் (கரு செல்கள் உட்பட), COVID-19 வைரஸ், மரப்பால், பாதுகாப்புக் காரணிகள் அல்லது பன்றி இறைச்சி பொருட்கள் அல்லது ஜெலட்டின் உள்ளிட்ட எந்தவொரு விலங்குகளின் தயாரிப்புகளையும் கொண்டிருக்கவில்லை. இந்த தடுப்பூசிகள் முட்டைகளில் வளர்க்கப்படுவதில்லை மற்றும் முட்டை பொருட்கள் சேர்க்கப்படுவதுமில்லை.

### மருத்துவ நிலைகள்

- மருத்துவ நிலைமைகளில் உள்ளவர்களுக்கும் COVID-19 தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளவை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு தடுப்பூசி சோதனையிலும் உள்ள பங்கேற்பாளர்களில் இருபது முதல் 45 சதவீதம் பேர் உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய், கல்லீரல் நோய் மற்றும் எச்.ஐ.வி போன்ற பாதிப்புகளைக் கொண்டிருந்தனர்.
- பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்புகள் அல்லது தன்னுடல் தாக்க நிலைமைகள் உள்ளவர்களுக்கு தடுப்பூசி பயன்பாடு குறித்த வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு தரவு எங்களிடம் உள்ளது. இந்த குழுக்களுக்கு தடுப்பூசி போடுவதை CDC இன்னும் பரிந்துரைக்கிறது, ஏனெனில் அவர்களுக்கு COVID-19 வந்தால் கடுமையான நோய்க்கான ஆபத்து அதிகம்.
- கருத்தரித்தல் மற்றும் குழந்தை பிறப்பு துறையைச் சார்ந்த மருத்துவ நிபுணர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் அல்லது கருத்தரிக்க திட்டமிட்டுள்ள பெண்கள் அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பூசியை பரிந்துரைக்கின்றனர். கர்ப்ப காலத்தில் கோவிட் -19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்று தரவுகள் காட்டுகின்றன. உண்மையில், சில ஆய்வுகள் தடுப்பூசி போடப்பட்ட பெண்கள் கர்ப்பம் மற்றும் பாலூட்டுதல் மூலம் தங்கள் குழந்தைக்கு கோவிட் -19 க்கு எதிரான ஆன்டிபாடிகளைக் (எதிர்ப்பான்கள்) கூட அனுப்ப முடியும் என்பதைக் காட்டுகின்றன. கர்ப்பிணிப் பெண்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டால், மரணம் உள்ளிட்ட, பல்வேறு அபாயங்களை சந்திக்கும் நிலை ஏற்படலாம். தடுப்பூசிகள் சிறந்த பாதுகாப்பு.

DOH 348-799 **February 2022** Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோர, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.govற்கு மின்னஞ்சல் செய்யவும்.

Washington State Department of Health